தமிழ் முல்லை

'ஆர்' கருத்தரங்கக் கட்டுரைத் தொகுப்பு

முனைவர் இராச.கலைவாணி

முனைவர் சு.தமிழ்வேலு

'ஆர்' அனைத்திந்திய ஆராய்ச்சிக் கழகம்
சென்னை

Scanned by CamScanner

தமிழ் முல்லை

‘ஆர்’ கருத்தரங்கக் கட்டுரைத் தொகுப்பு

பதிப்பாசிரியர்

முனைவர் **இராச.கலைவாணி**

முனைவர் **சு.தமிழ்வேலு**

வெளியீடு

"ஆர்" அனைத்திந்திய ஆராய்ச்சிக் கழகம்

நிறுவுநர் : பேராசிரியர் க.ப.அறவாணன்

தமிழ்க்கோட்டம், 2, முனிரத்தினம் வீதி

அமைந்தகரை

சென்னை – 600 029

Scanned by CamScanner

❖ தமிழ் முல்லை

❖ ‘ஆர்’ கருத்தரங்கக் கட்டுரைத் தொகுப்பு

❖ ISBN No. 978-93-85349-47-8

❖ பதிப்பாசிரியர் : முனைவர் இராச.கலைவாணி
முனைவர் சு.தமிழ்வேலு

❖ முதற்பதிப்பு : 2022, திசம்பர்.

❖ பக்கங்கள் : 386

❖ உரிமை : ‘ஆர்’ அனைத்திந்திய ஆராய்ச்சிக் கழகம்
தமிழ்க்கோட்டம்
2, முனிரத்தினம் வீதி
அமைந்தகரை
சென்னை – 600 029
✆ 044 – 2374 4568

❖ விலை : ரூ. 400/–

❖ அச்சிட்டோர் : அடையாறு மாணவர் நகலகம்,
சென்னை – 600 005

Scanned by CamScanner

56.	முனைவர் ஷிஃபா ஆண்டாளின் அறிவியல் மொழி	-	340
57.	முனைவர் க.ஸ்ரீ மதி கோத்தகிரி வட்டார நாட்டுப்புற மருத்துவம்	-	346
58.	**T.K.EAZHISAIPPAAVAI** 'Longing' in Kamala Das Poem	-	353
59.	**E.GAYATHRI** Migration, Imaging and Identity of Women in Diasporic Cinema Space	-	356
60.	**M.GEETHA** Humanism in R. L. Stevenson's The Strange Case of Dr. Jekyll and Mr. H yde	-	361
61.	Dr. **M. KANIKA PRIYA** Depiction of Caste and Feminism in Neela Padmanaban's Generations	-	365
62.	**R.LAVANYA** The Catalyst of culture and politics	-	369
63.	**VEERAMUTHU MURUGESAN** A Study on Effective of Vaccine in Controlling the Susceptibility of Covid -19 (in E.B.Colony, Thanjavur)	-	374
64.	Dr.**T.SEBASTHI JOHN BASKAR** 'The philosophy behind the Cosmic Relationship of human beings Depicted in the writings of M.S.Udhayamoorthy'	-	382

Scanned by CamScanner

கோத்தகிரி வட்டார நாட்டுப்புற மருத்துவம்

முனைவர் க. ஸ்ரீ மதி,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர் - 641 029

கோத்தகிரி பகுதி மக்களின் மருத்துவக் குறிப்புகளைத் தொகுத்துரைக்கும் கட்டுரை.

முன்னுரை

உலகில் உள்ள உயிர்கள் அனைத்தும் உயிர்வாழ்வதற்கு உறுதுணையாக அமைவது இயற்கையாகும். மனிதர்கள் தங்களின் தேவைகள் அனைத்திற்கும் இயற்கையைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். அவ்வகையில் மிகவும் சிறப்புமிக்க ஒன்றாகக் கருதப்படுவது மருத்துவ முறைகள் ஆகும். ஆதி கால மனிதன் காடுகளிலும், குகைகளிலும் வாழ்ந்த சமயங்களில் தங்களுக்கு ஏற்படுகின்ற காயங்கள் மற்றும் நோய்களுக்கு இயற்கைப் பொருட்களான தாவரங்களைப் பயன்படுத்திக் கொண்டான். அம்மருத்துவ முறை இன்றளவும் நாட்டுப்புற மருத்துவமாக மக்களின் வாழ்வியலில் ஒரு அங்கமாக விளங்குகிறது. இம்மருத்துவம் குறித்து நீலகிரி மாவட்டத்திற்கு உட்பட்ட ஒரு பகுதியான கோத்தகிரி வட்டாரத்தில் வசிக்கக் கூடிய மக்களிடம் களஆய்வில் சேகரித்தத் தரவுகளின் வாயிலாக இக்கட்டுரை அமைகின்றது. மேலும் சேகரித்தத் தரவுகளின் அடிப்படையில் குழந்தைகளுக்கான மருத்துவம், பெண்களுக்கான மருத்துவம், ஆண்களுக்கான மருத்துவம் மற்றும் இருபாலருக்கும் பொதுவான மருத்துவம் என்ற நான்கு பிரிவுகளாகப் பிரித்து மொத்தம் 20 நோய்களுக்கான மருத்துவமுறைகள் குறித்து இக்கட்டுரையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

கோத்தகிரி வட்டார மருத்துவம்

மலைகளின் ராணி என்றழைக்கப்படும் நீலகிரி மாவட்டத்தின் ஒரு பகுதி கோத்தகிரியாகும். கோத்தகிரியில் கோத்தர்கள், இருளர்கள் மற்றும் குரும்பர்கள் என்ற பழங்குடி இனமக்களும், பிற பகுதிகளிலிருந்து குடியேறியவர்களான படகர்கள் மற்றும் தேயிலைத் தோட்டத் தொழில் புரியும் மக்கள் எனப் பல்வேறு இன மக்களும் வாழுகின்றன. இப்பகுதியானது இயற்கை நிறைந்த பகுதி என்பதனால் அங்குக்

Scanned by CamScanner

கிடைக்கக்கூடிய செடி கொடிகளை மக்கள் மருத்துவத்திற்குப் பயன்படுத்திக்கொள்கின்றனர். குறிப்பாகத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களிடம் சில நோய்களுக்கு இன்றும் பழமைமாறா முறையில் மருத்துவம் செய்யக்கூடிய நாட்டுப்புற மருத்துவம் காணப்படுகிறது.

குழந்தைகளுக்கான மருத்துவம்

ஆண் குழந்தை மற்றும் பெண்குழந்தை என்ற இருபாலருக்கும் வருகின்ற நோய்களைக் கோத்தகிரி வட்டாரப் பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் தங்களுக்குக் கிடைக்கக்கூடிய இயற்கைத் தாவரங்கள் மற்றும் உணவிற்குப் பயன்படுத்தும் பொருட்களை வைத்து அந்நோய்களைக் குணப்படுத்துகின்றனர். இன்றும் இயற்கை முறையில் மூன்று நோய்களுக்கான மருந்துகள் குழந்தைகளுக்குக் கொடுக்கப்பட்டு வருகின்றது. அவை வயிற்று வலி, வயிற்றுப் போக்கு, எண்ணெய் தயாரித்தல், சீர் தட்டுதல் போன்றவையாகும் .

வயிற்று வலி

குழந்தை சரியாகப் பால் குடிக்காமல் இருந்தால் மற்றும் தீட்டான பெண்களின் நிழல் குழந்தைமேல் படுதல் அல்லது அவர்கள் குழந்தையைத் தொடுதல் போன்ற செயல்களினால் குழந்தைக்கு உடல்நலக் குறைவால் வயிற்று வலி ஏற்படும். மேலும் தாய் உண்ட உணவு சேராமல் வயிற்றிற்கு ஒவ்வாமை ஏற்படும். இவ்வாறு ஏற்படக் கூடிய வயிற்று வலியை மக்கள் சரி செய்யும் முறையாகத் திப்பிலியை நன்கு பொடி செய்து தேனில் கலந்து அரை சங்கு என்ற அளவில் குழந்தைக்குக் கொடுத்து வர வயிற்று வலி குணமாகி விடும் என்று கூறுகின்றனர்.

வயிற்றுப் போக்கு

குழந்தைக்கு உணவு நன்கு செரிமானம் ஆகாமல் இருக்கும் பொழுதும், உடற் சூட்டினாலும் மற்றும் தாய் குழந்தைக்குச் சேராத உணவு உண்பதாலும் வயிற்றுப் போக்கு ஏற்படும். அதனைக் குணப்படுத்தும் முறையாகக் கசகசாவை நன்கு அரைத்துத் தாய்ப்பாலில் கலந்து அரை சங்கு என்ற அளவில் ஒரு நாளைக்கு இரண்டு வேளை கொடுத்து வந்தால் வயிற்றுப் போக்கு குணமாகும் என்பது அறியப்படுகிறது.

எண்ணெய் தயாரித்தல்

குழந்தைகளுக்குச் சளி பிடிக்காமல் இருப்பதற்குத் தேங்காய் எண்ணெய்யைக் காய்ச்சித் தேய்க்கும் வழக்கத்தைக் கொண்டுள்ளனர். தேங்காய் எண்ணெயில் கற்பூரம், பூண்டு, வெற்றிலைக் காம்பு, ஆடுதொடா இலை மற்றும் சீர் பச்சிலை போன்ற பொருட்களைப்

Scanned by CamScanner

பயன்படுத்தி நன்கு காய்ச்சிக் குழந்தையின் தலை மற்றும் உடல் பகுதிகளில் தேய்த்து விடுகின்றனர். இவ்வாறு செய்வதன் மூலம் குழந்தைகளுக்கு அடிக்கடி சளி பிடிப்பது தவிர்க்கப்படுகிறது.

சீர் தட்டுதல்

சீர் தட்டுதல் என்பது தாயைத் தவிர மற்றப்பெண்கள் யாரும் மாதவிலக்கான நாட்களில் குழந்தையின் அருகில் செல்லக் கூடாது என்றும், மற்றும் மூன்று மாதம் (அ) ஐந்து மாதங்களில் கருக்கலைப்பு ஏற்பட்ட பெண்களின் நிழலும் குழந்தைகளின் மேல் படக் கூடாது என்றும் கூறுகின்றனர். அவ்வாறு பட்டால் அக்குழந்தைக்குத் தீராத காய்ச்சல், வாந்தி, பேதி, கண்பொங்குதல் போன்றவை ஏற்படும் என்றும் அவை சில நேரங்களில் குழந்தையின் உயிருக்கே ஆபத்தையும் ஏற்படுத்திவிடும் என்று கூறுகின்றனர். குழந்தை பிறந்தது முதல் மூன்று வயது வரை சீர் தட்டுதல் ஏற்படாமல் தடுப்பதற்காகச் சீர் பச்சிலை ஒரு கொத்து, ஒரு சிட்டிகை மஞ்சள், சிறிதளவு வசம்பு ஆகியவற்றை நன்கு சாந்து போன்று அரைத்துத் தலை முதல் பாதம் வரை தேய்த்துக் குளிக்க வைப்பதாகவும், குளிக்க வைக்கும் பொழுது சிறிதளவு குழந்தையின் நாக்கில் தேய்த்து விடுவதாகவும் கூறுகின்றனர். மேலும் அச்சாந்தினைச் சிறிய வெள்ளைத்துணியில் கட்டி குழந்தையின் கைகளில் கடிகாரம் போன்றும் மற்றும் இடுப்பில் கட்டப்பட்டிருக்கும் கொடியிலும் கட்டி விடுகின்றனர். அவ்வாறு செய்வதன் மூலம் குழந்தைக்கு ஏற்படக் கூடிய சீர் தட்டுதலைத் தவிர்க்கலாம் என்று தகவலாளர் வள்ளியம்மாள் கூறுகிறார்.

ஆண்களுக்கான மருத்துவம்

ஆண்களுக்கு மட்டுமே ஏற்படுகின்ற நோய்களைக் குணப்படுத்தும் முறையை ஆண் மருத்துவம் என்று வகைப்படுத்தி விளக்கப்பட்டுள்ளது. இதில் ஆண்களுக்கு ஏற்படுகின்ற சிறுநீர் கற்களை இயற்கை முறையில் எவ்வாறு குணப்படுத்த வேண்டும் என்பது குறித்து இத்தலைப்பில் எடுத்தியம்பப்படுகிறது.

சிறுநீர் கல்

சிறுநீரில் அதிகமாக யூரிக் அமிலம், கால்சியம் போன்ற தாது உப்புகளால் ஏற்படக்கூடிய கற்கள் சிறுநீரகக் கற்கள் எனப்படும். அவற்றை இயற்கையாகச் சரிசெய்யும் விதமாக வாழை மர கிழங்கில் தேங்கி இருக்கும் நீரினை ஒரு டம்ளர் என்ற அளவில் காலை வெறும் வயிற்றில் மூன்று நாட்கள் குடித்து வர சிறுநீரில் ஏற்பட்டிருக்கும் கல் கரைந்துவிடும் என்கிறார் தகவலாளர்.

பெண்களுக்கான மருத்துவம்

பெண்களுக்குரித்தான நோய்களைக் குணப்படுத்தும் மருத்துவமுறை

Scanned by CamScanner

பெண்களுக்கான மருத்துவம் எனப்படும். இதில் பிரசவ மருந்து, இடுப்புவலி என்ற இரண்டு மருத்துவமுறைகள் விளக்கப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றின் மருத்துவமுறைகளும் பின்வருமாறு:

பிரசவ மருந்து

சுகப் பிரசவமான பெண்களுக்குக் கொடுக்கப்படும் ஒரு வகையான லேகியம் போன்ற உணவு பிரசவ மருந்து எனப்படும். இம்மருந்தைக் கொடுப்பதனால் சுகப் பிரவத்தின் போது ஏற்பட்ட வயிற்று உபாதைகள், கர்ப்பப்பை சுருங்குதல், தேவையற்றக் கழிவுகளை வெளியேற்றுதல், உடலிற்கு ஆற்றல் கொடுத்தல் மற்றும் தாய்பால் ஊறுதல் போன்றவற்றிற்கு உறுதுணையாக (லேகியம்) அமைகிறது. இம்மருந்து தயாரிக்கும் முறையானது பூண்டு, சதகுப்பை, சாதிப் பூ, அரிசி திப்பிலி, முருக்கு திப்பிலி, வால் மிளகு, குருமிளகு, சீரகம் போன்றவற்றை நன்கு வறுத்து அம்மியில் அரைத்துச் சாந்து போன்று எடுத்துக்கொள்கின்றனர். பின்பு அதனை மூன்று நாட்களுக்கு இரு வேளைகள் (காலை, மாலை) என்ற முறையில் உணவிற்கு முன்பு சிறிய அளவில் உருண்டையாகப் பிடித்து வாயில் போட்டு விழுங்கக் கொடுக்கின்றனர்.

இடுப்பு வலி

மாதவிலக்கான நாட்களில் ஏற்படுகின்ற வயிற்று வலி, கைகால் வலி, முதுகு வலி போன்றவற்றைச் சரிசெய்வதற்கு இயற்கை மருந்தாக வீட்டில் இருக்கும் வெள்ளைப் பூண்டை பச்சையாகவும் மற்றும் நெருப்பில் சுட்டும் சாப்பிடுவதாகக் கூறுகின்றனர்.

இருபாலருக்கும் பொதுவான மருத்துவம்

ஆண்கள் மற்றும் பெண்கள் இருபாலருக்கும் பொதுவான மருத்துவமுறைகள் என்ற அடிப்படையில் மொத்தம் பதிநான்கு நோய்களுக்கான மருத்துவமுறைகள் இவ்வகைப்பாட்டில் விளக்கப்பட்டுள்ளன. அவை, வயிற்று வலி (பேதி), சளி, வயிற்றுக் கடுப்பு, வயிற்று வலி, மஞ்சள் காமாலை, வாந்தி, அசதி நீங்க, எண்ணெய் தயாரித்தல், உடல் அரிப்பு, ஒற்றைத் தலைவலி, தலையில் பூச்சி வெட்டுதல், இதய பலவீனம் மற்றும் மூச்சுப் பிடிப்பு ஆகும். அவை ஒவ்வொன்றின் மருத்துவ முறைகள் பின்வருமாறு

வயிற்று வலி (பேதி)

வயிற்று வலியுடன் பேதி ஏற்பட்டிருப்பின், அதனைக் குணப்படுத்துவதற்கு ஓமம், பெருங்காயம், பூண்டு, இஞ்சி ஆகியவற்றைச் சுட்டு சுடுதண்ணீரில் போட்டு கொதிக்க வைக்க வேண்டும். பின்பு அதனை வடிகட்டி ஒரு முறை (அ) இரண்டு முறை குடித்து வர பேதி குணமாகும் என்று கூறுகின்றனர்.

Scanned by CamScanner

சளி

தீராத சளி ஏற்பட்டிருப்பின் அதனைக் குணப்படுத்துவதற்கான மருந்து மிளகு, சுக்கு ஆகிய இரண்டையும் அம்மியில் தட்டி எடுத்து நீரில் இட்டு வேக வைக்கின்றனர். பின்பு அந்நீரினை ஒரு நாளைக்கு மூன்று வேளை குடித்துவர சளி குணமாகும் என்று கூறுகின்றனர்.

நெஞ்சு சளி

தீராத சளி ஏற்பட்டோருக்கான மருத்துவம், நன்கு ஊற வைத்த பச்சரிசி, தேங்காய், சுக்கு ஆகியவற்றை அரைத்து அவற்றுடன் தேவையான அளவு கருப்பட்டி கலந்து அதனை மூன்று நாட்களுக்கு ஒரு வேளை உணவாகச் சாப்பிட்டால் நெஞ்சு சளி குணமாகிவிடும் என்றும் கூறுகின்றனர்.

வயிற்றுக்கடுப்பு

வயிற்றுக் கடுப்பு ஏற்பட்டவர்களுக்கு மாதுளம் பிஞ்சினை நன்கு அரைத்து பாலில் கலந்து மூன்று வேளைக் குடிக்க கொடுகின்றனர். அவ்வாறு செய்வதன் மூலம் வயிற்றுக் கடுப்பு நின்று விடும்.

வயிற்று வலி

பெரியவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் வயிற்றுவலியைச் சரிசெய்யும் முறையானது, ஒரு சிட்டிகை ஓமத்தை நன்கு வறுத்து அம்மியில் நுணுக்கி அதனுடன் கருப்பட்டி கலந்து சாப்பிட்டு வர வயிற்று வலி குணமடையும்.

மஞ்சள் காமாலை

கீழாநெல்லி இலையை நன்கு அரைத்து வெள்ளாட்டுப்பாலில் கலந்து குடிக்கக் கொடுக்கின்றனர். ஒரு நாளைக்கு ஒருவேளை என்ற அளவில் தொடர்ந்து மூன்று மாதம் குடித்து வந்தால் மஞ்சள் காமாலை நோய் குணமாகிவிடும் என்று கூறுகின்றனர்.

வாந்தி (ஒவ்வாமை)

பெரியவர்களுக்கு உணவு சேராமல் ஒவ்வாமையினால் தொடர்ந்து உமிழ்நீர் ஏற்பட்டு வாந்தி வரும் அதனைச் சரிசெய்யும் முறையாகக், கொய்யா மரத்தின் இளந்தளிர் இலையை நன்கு வேகவைத்து அந்த நீரை ஒரு வேளை குடித்து வந்தால் குணமாகிவிடும் என்கின்றர்.

அசதி நீங்க

கடின உழைப்பின் காரணமாக உடல் அசதி ஏற்படும் அதனைச் சரிசெய்யும் முறையாக யூக்களிப்டஸ் இலையை வெந்நீரில் கொதிக்க வைத்து குளித்தல் உடல் அசதி, சளி மற்றும் உடல்வலி போன்றவை குணமடையும் என்கிறார்கள்.

Scanned by CamScanner

உடல் அரிப்பு

உணவு ஒவ்வாமை, பூச்சிக்கடி, கடல்சார் உணவுகள் போன்ற வற்றினால் ஏற்படுகின்ற உடல் அரிப்பினைச் சரிப்படுத்துவதற்காக இம்முறை பயன்படுத்தப்படுகிறது. மருந்து தயாரிக்கும் முறையானது சிறிதளவு பச்சைப் பயறு, மஞ்சள் தூள், உப்பு சேர்த்து பச்சையாக அம்மியில் அரைத்து அந்த சாந்தை உடலில் பூசி சிறிது நேரம் கழித்து குளித்தால் உடல் அரிப்பு சரியாகிவிடும்.

எண்ணெய் தயாரித்தல் (பேதி)

வயிற்றைச் சுத்தம் செய்வதற்காகவும் வயிற்றில் ஏற்படும் பூச்சிகளை வெளியேற்றுவதற்காகவும் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை விளக்கெண்ணையை நன்குக் காய்ச்சி ஆரவைத்துக் கொடுக்கும் வழக்கம் கொண்டுள்ளனர். இவ்வெண்ணையைக் குடிப்பதனால் வயிற்றில் உள்ள அசடுகள் நீங்கி வயிறு சுத்தமாகும். இதனைக் குடிக்கும் முறையானது காலை வெறும் வயிற்றில் குடிக்கவேண்டும். அந்த நாள் காலைத் தொடங்கி மாலை வரை சூடான கஞ்சித்தண்ணீர்தான் குடிக்க வேண்டும். நன்கு வயிறு சுத்தமான பின்பு மாலை குளித்துவிட்டு மிளகு, சீரகம், பெருங்காயம், பூண்டு, இஞ்சி போன்றவற்றைச் சாந்து போன்று அரைத்து எண்ணெய் ஊற்றாமல் தண்ணீரில் கொதிக்க வைத்து சுடுசாப்பாட்டில் சேர்த்து உண்ணச் செய்கின்றனர். இவ்வாறு செய்வதனால் உடலில் உள்ள எண்ணெய் மற்றும் அசடுகள் அனைத்தும் பேதியாக வெளியேறிவிடும் என்று கூறுகின்றனர். எண்ணெய் தயாரிக்கும் முறை, தேவையான அளவு விளக்கெண்ணையை வாணலில் ஊற்றி நன்கு காயவைத்து அவற்றுடன் சிறிதளவு மிளகு, வெள்ளைப் பூண்டு, காயம் மற்றும் பாகற்காய் இலைச் சாறு ஆகியவற்றைச் சேர்த்து கொதிக்க வைத்து எண்ணெய் தயாரித்துக் கொள்கின்றனர். காய்ந்த எண்ணெய்யை நன்கு ஆரவைத்து சிறியவர் கள், பெரியவர்கள் என அனைவரும் குடிக்கலாம் என்கின்றனர்.

ஒற்றைத் தலைவலி

ஒற்றைத் தலைவலி ஏற்பட்டால் சிறிய வெங்காயத்தைத் தோல் உறித்து நன்கு கசக்கி தலைவலிக்கும் இடத்தில் தடவினால் தலைவலி குணமாகிவிடும் என்று கூறுகின்றனர்.

முடி (பூச்சு வெட்டு)

தலையில் பூச்சு வெட்டு ஏற்பட்டு முடிகள் உதிர்ந்து அவ்விடம் சொட்டையாக ஆகும். அவற்றைச் சரி செய்வதற்குச் சின்னவெங்காயம் சிறந்த மருந்து என்று கூறுகின்றனர். சின்னவெங்காயத்தை நன்கு சாந்து போன்று அரைத்து குளிப்பதற்கு அரை மணிநேரத்திற்கு முன்பு தேய்த்து குளிக்கவேண்டும். இவ்வாறு தொடர்ந்து ஒரு மாதம் செய்து

Scanned by CamScanner

வந்தால் பூச்சுவெட்டு நீங்கி அவ்விடத்தில் புதிய முடி வளர ஆரம்பிக்கும் என்று கூறுகின்றனர்.

இதயம் வலுப்பெற

இதயம் பலவீனம் ஆனவர்களுக்கு அருகம்புல்லைப் பச்சையாக அரைத்து அந்த நீரை ஒரு நாளைக்கு மூன்று வேளை என்ற வீதம் ஏழு நாட்கள் தொடர்ந்து குடித்து வந்தால் இதயம் வலுப்பெற்று சீராகவும் ஆரோக்கியமாகவும் இருக்கும் என்று கூறுகின்றனர்.

மூச்சுக் குத்து

மூச்சுக்குத்து என்பது இடுப்பின் பக்கம் மூச்சுப் பிடிப்பு ஏற்படும். அவ்வாறு ஏற்பட்டால் மூச்சு விட முடியாமலும், குனியவும் நிமிரவும் முடியாமலும் போய்விடும். அச்சமயம் அதனைச் சரி செய்யும் முறையாக வைத்தியம் பார்க்கும் நபர் (பெண்ணை) அணுகுவார்கள். மூச்சுப்பிடிப்பு ஏற்பட்டோர் அதிகாலை எழுந்தவுடன் வைத்தியர் வீட்டிற்குச் செல்வர். அங்கு வைத்தியர் இறைவனை வணங்கி விபூதி போட்டு மந்திரம் கூறி மருந்துவத்தை ஆரம்பிப்பார். அதற்குத் தேவையான பொருட்களான இரண்டு நீளமான வாழை மட்டையை எடுத்துக்கொண்டு மூச்சுப் பிடிப்பு ஏற்பட்டோரின் இடுப்பின் இரண்டு பக்கமும் வைத்து வாழைமட்டையை வைத்து வைத்தியர் இறைவனை வேண்டி விபூதி போடுவர். அவ்வாறு செய்யும் பொழுது வாழமட்டை இரண்டும் இணையும். இவ்வாறு தொடர்ந்து மூன்று நாட்கள் செய்து வர மூச்சுப்பிடிப்பு குணமாகிவிடும் என்று கூறுகின்றனர்.

முடிவுரை

கோத்தகிரி வட்டார தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களிடம் சில நோய்களுக்கு மாறாத மருத்துவ முறைகள் இன்றளவும் காணப்படு கிறது. அவற்றைக் களஆய்வு செய்து அத்தரவுகளின் அடிப்படையில் நோய்களுக்கான மருத்துவம் இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளன.

தகவலாளர் பெயர்

1. காந்தியம்மாள்
2. வள்ளியம்மாள்
3. முத்துலெட்சுமி

சான்றொண் விளக்கம்

1. டாக்டர் க. வேங்கடேசன் ஆய்வுநோக்கில் நாட்டுப்புற மருத்துவம்., பக். 13
2. இராசேந்திரன்., அ., நாட்டுப்புறப் பண்பாட்டுப் பழ வழக்கங்கள்., பக். 107
3. மேலது., பக். 109

Scanned by CamScanner